**செய்தி வெளியீடு எண்:1258** **நாள்:02.12.2021**

# செய்தி வெளியீடு

**தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை**

**ஒன்றிய அரசின் தேசிய விருதை பெறுகிறது**

மாற்றுத்திறனாளிகள் நலனில் சிறந்த அக்கறை கொண்டு, அவர்களுடைய வளர்ச்சி, உரிமை, அதிகாரமளித்தல் மற்றும் முன்னேற்ற நிலையில் ஈடுபட்டமைக்காக ஒன்றிய அரசின் சமூக நீதி மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அமைச்சகம் தமிழ்நாட்டிற்கு சிறந்த விருதை வழங்குகிறது.

கொரானா உச்சக்கட்டத்தின் WHO பரிந்துரைத்த அனைத்து நடவடிக்கைகளையும் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மாற்றுத்திறனாளிகளுக்கு விரைவாக செயல்படுத்தியதற்காகவும், குறிப்பாக அவர்களின்அத்தியாவசிய தேவைகள், நிதி உதவி, தடுப்பூசி, உதவி உபகரணங்கள் ஆகியவற்றை உதவி மையம் அமைத்து அதன் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு மகத்தான சேவைகள் புரிந்ததன் அடிப்படையில் இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு சைகை மொழி பெயர்ப்பாளரும் நிரந்தரமாக நியமிக்கப்பட்டு செவித்திறன் குறைபாடு உள்ளவர்களின் குறைகளை களையும் வண்ணமும் தமிழ்நாடு அரசு செயல்படுகிறது.

மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை தரத்தை முன்னேற்றும் வகையில் சங்கல்ப் ( Sankalp) திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளின் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையத்தை (DELC) மண்டல அளவில் அமைத்துள்ளது.

மேலும், மாநில விருதை தவிர மாற்றுத்திறனாளிகளுக்கு சேவைபுரிந்தமைக்காக மாவட்ட அளவில் சேலம் மாவட்டத்திற்கு ஒரு தேசிய விருதும், மாற்றுத்திறனாளிகளில் சிறந்த பணியாளர்/சுயதொழில் செய்பவர்கள் என 6 நபர்களுக்கு தேசிய விருதுகள் என தமிழ்நாட்டிற்கு 8 எண்ணிக்கையிலான விருதுகளை ஒன்றிய அரசிற்கான சமூக நீதி மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அமைச்சகம் வழங்குகிறது.

மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**